8th March 1969]

Availability of Mica and Graphite in Nagamalai.

* 164 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the **Minister for Education and Industries be pleased to state whether** the Government have investigated into the availability of Mica and Graphite in Nagamalai near **Madurai?**

காக்காப்பொன், காரீயம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மதுரை அடுத்த நாகமலையில் காக்காப்பொன், பென்சிலுக்கு வேண்டிய கூற்கள் கிடைப்பதை சர்க்கார் பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்திலுள்ள நாகமலையில் கல்லாத்துக்கு அருகாமையில் கிடைக்கும் ‘கிராபைட்’ என்னும் பென்சில் செய்யப் பயன்படும் காரீயம் குறித்து மாநிலப் புவியியல் ஆராய்ச்சிப் பிரிவு ஆராய்ச்சி நடத்தியது. இது பெருமளவில் இல்லை. மேற்சொன்ன மலையில் மைக்கா (காக்காப்பொன்) கிடைப்பதைப் பற்றி இந்தியப் புவியியல் ஆராய்ச்சித்துறை ஆராய்ந்ததன் பேரில் அங்குள்ள மைக்கா பொருளாதார ரீதியில் எடுக்கக்கூடிய வகை அல்ல என்று தெரிய வந்தது.

Iron ore deposits in Pudukkottai area

* 165 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether it is a fact that iron ore deposits are found in Pudukkottai area; and

(*b*) if so, whether the Government have investigated this?

புதுக்கோட்டைப் பகுதியில் இரும்புக் கனிப் பொருள்கள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுக்கோட்டை பகுதியில் இரும்பு கனிப் பொருள் கிடைப்பதாகக் கூறப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில் அரசு அதைப் பரிசீலித்ததா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) & (இ) ஆர். குளத்தூர் வட்டத்திலுள்ள மாலம்பட்டிக்கு அருகில் இரும்புக் கனி வளம் கிடைப்பதாக இந்தியக் கனிவள ஆராய்ச்சிக் குழுவும் 1955-56-ம் ஆண்டில் கண்டு பிடித்துள்ளது. இரும்புக்கனி மிகக் குறைந்த பரப்பளவில் கிடைப்பதால், அதை ஆதாயம் தரத்தக்க வகையில் சுரங்க முறையில் வெட்டி எடுத்துப் பயன்படுத்துவதற்கில்லை.